**STARTING TIME 12.22 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 207/2019**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. R. Suresh Babu, Grade-III Bench Clerk of this court, on 12.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **செல்வம்** Father's Name :

Address :

Calling : Age :

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

32. வருவாய் கோட்டாட்சியர் பட்டா பெயர் மாற்றம் உத்தரவை ரத்து செய்த பின்னிட்டும் இவ்வழக்கு நிலுவையில் இருந்து வரும் காரணத்தால் தான் பி.வா.சா.ஆ.4 கணினி பட்டாவில் மட்டும் உள்ள உரிமையாளர்கள் பெயரை இது நாள்வரை மாற்றவில்லை என்றால், சரிதான். எனவே, பி.வா.சா.ஆ.4 கணினி பட்டா 1–ம் பிரதிவாதிக்கு ஆதரவானது அல்ல என்றால், சரியல்ல.

33. எனது மனைவியான 1–ம் பிரதிவாதி கடந்த 21.10.2013 அன்று 6–ம் பிரதிவாதியுடன் செய்துக் கொண்டதாக கூறி பி.வா.சா.ஆ.2 குத்தகை ஒப்பந்தப் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். 6–ம் பிரதிவாதி 2011–ம் ஆண்டில் சீனாவில் மருத்துவ படித்து வந்தார் என்றால், 2011–ம் ஆண்டே படிப்பை முடித்துவிட்டார். சீனாவில் மருத்துவ படித்து படித்திருந்தாலும், இந்தியாவில் தொழில் செய்ய ஒரு தேர்வு எழுத வேண்டும் என்றால், சரிதான்,

அந்த தேர்வை எனது மகளான 6–ம் பிரதிவாதி எந்த வருடம் எழுதி தேர்ச்சி பெற்றார் என்றால், 2013–ம் ஆண்டே எழுதி தேர்ச்சி பெற்றார். எந்த மாதத்தில் தேர்ச்சி பெற்றார் என்றால், 2013–ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தேர்ச்சி பெற்றார்.

34. 6–ம் பிரதிவாதி 2014–ம் ஆண்டுக்கு பிறகு தான் மருத்துவராக தொழில் செய்ய தொடங்கினார் என்றும், எனவே, 2013–ம் ஆண்டு பி.வா.சா.ஆ.2 குத்தகை பத்திரத்தை 6–ம் பிரதிவாதி பிரதிபலனை செலுத்தி எழுதிக் கொண்டதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.7 முதல் பி.வா.சா.ஆ.11 வரையான ஆவணங்களில் எனது மனைவி 1–ம் பிரதிவாதி தாவா சொத்தில் 21 சென்டை கிரையம் பெற்றதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால், இல்லை.

35. பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.7 முதல் பி.வா.சா.ஆ.11 வரையான ஆவணங்களில் கீதா மற்றும் குப்பன் பெயரில் புகார் கொடுத்ததாக மட்டும் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அந்த புகார் சம்மந்தமாக அவரை அழைத்து விசாரித்தது சம்மந்தமாக எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். மேற்படி கீதா மற்றும் குப்பன் ஆகியோர்களை அழைத்து விசாரித்திருந்தால் 1–ம் பிரதிவாதி பெயரில் பெற்ற கிரையப் பத்திரமும், 6–ம் பிரதிவாதி பெயரில் எழுதிய குத்தகை பத்திரம் குறித்து தெரியவந்து அவர் நீதிமன்ற நடவடிக்கை எடுத்திருப்பார் என்றால், சரிதான்.

36. 20.12.2015 அன்றைய தேதியில் வாதி, எனது மனைவியும், மற்ற பிரதிவாதிகளையும் பாகப் பிரிவினை செய்து தர கோரி அணுகினார் என்றும், ஆனால் பாகம் பிரித்து தர முன்வராததால் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல.

37. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.9–ஆன 20.06.2014 தேதியிட்ட கடிதத்தில் உள்ள பார்வை 2–ல் 06.04.2015 என எழுதப்பட்டுள்ளது என்றால்,

சரிதான். அதே போல் அந்த கடிதத்தில் 2–வது பத்தியில் 07.03.2017 தேதியில் 1–ம் பிரதிவாதி கடிதம் எழுதியதாக வாசகம் உள்ளது என்றால், சரிதான். 20.06.2014 தேதியிட்ட தாக உள்ள பி.வா.சா.ஆ.9 கடிதத்தில், 2015 மற்றும் 2017 ஆண்டுகளில் கடிதம் எழுதியதாக வாசகங்கள் உள்ளதால், அந்த கடிதமே வழக்கிற்காக வேண்டி தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல.

38. 1–ம் பிரதிவாதி பெயரில் பெற்ற கிரையமும், 6–ம் பிரதிவாதி பெயரில் எழுதிக் கொடுத்த குத்தகை பத்திரமும் எந்த பிரதிபலனையும் செலுத்தாமல் பெயரளவில் எழுதப்பட்ட ஆவணம் என்றால், சரியல்ல. அந்த ஆவணங்கள் தாவா சொத்தில் உள்ள வாதியின் உரிமையை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல.

39. பி.வா.சா.ஆ.2 குத்தகை பத்திரத்தின் மூலம் தாவா சொத்தில் எனது மகளான 6–ம் பிரதிவாதி எந்த வித விவசாய பணியையும் செய்யவில்லை என்றால், சரிதான், எனது மகள் பெயரில் கேஸ் ஏஜென்சி பெறுவதற்காக தான் குத்தகை பத்திரமே எழுதிக் கொடுக்கப்பட்டது. அது போல் கேஸ் ஏஜென்சிக்காக குத்தகை பத்திரம் எழுதிக் கொடுத்தாக 1–ம் பிரதிவாதியின் பதிலுரையிலும், எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான்.

40. வாதி மற்றும் 2 முதல் 5 வரையான பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் உள்ள உரிமையை அபகரிக்க வேண்டியே பிரதிபலன் ஏதும் செலுத்தாமலும், பொய்யான சங்கதிகளை கூறியும் 1–ம் பிரதிவாதி பெயரில் கிரையப் பத்திரத்தையும், 6–ம் பிரதிவாதி பெயரில் குத்தகை பத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளோம் என்றால், சரியல்ல.

41. பி.வா.சா.ஆ.1 கிரையப் பத்திரமும், பி.வா.சா.ஆ.2 குத்தகை பத்திரமும் எந்த காலத்திலும் நடைமுறைக்கே வரவில்லை என்றால், சரியல்ல. எனவே, வாதி வழக்கில் கோரியவாறு அனைத்து பரிகாரங்களும் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

4–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**ENDING TIME 12.50 P.M.**

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Date: 2025.08.12 17:04:34 +0530